Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 262

திங்கட்கிழமை
15 ஓகஸ்ட் 2022

ஆடி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

முச்சந்தி முரளி



"பெற்றோல் தாராளமா இருந்தால் இனியும் ஏன் கியூ ஆர் கோட்டும்? கோட்டா முறையும்?"

## பெற்றோலுக்கு "மவுசு" யாழிலும் குறைவு

யாழ்ப்பாணம், ஓக.15
யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த வாரங்களில் பெற்றோலுக்காக நீண்ட வரிசைகள் காணப்பட்டிருந்த நிலையில், தற்போது எரிபொருள்கள் விற்பனையின்றித் தேங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
தற்போது 'கியூ ஆர்' முறைமையில் பெற்றோல் விநியோகம் மேற்கொள்ளப்படும் நிலையில், பெற்றோலை அளவுக்கு அதிகமாகக் கொள்வனவு செய்வது தடுக்கப்பட்டுள்ளது. 11 ➤

## கொரோனா: இருவர் சாவு!

கொழும்பு, ஓக.15
நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.
இந்த உயிரிழப்புக்கள் நேற்று 11 ➤

புலம்பெயர் அமைப்புக்கள் மீதான
## தடை நீக்கத்துக்கு சம்பந்தன் வரவேற்பு



கொழும்பு, ஓக.15
புலம்பெயர் அமைப்புக்கள் சிலவற்றின் மீதும் மற்றும் தனிநபர்கள் சிலர் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடையை இலங்கை அரசாங்கம் நீக்கியமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் வரவேற்புத் தெரிவித்துள்ளார். 11 ➤

டொலரைத் தக்க வைப்பதற்காக
## 2,500 பொருள்களின் இறக்குமதிக்குத் தடை?

மத்திய வங்கி, நிதி அமைச்சுக்குப் பரிந்துரை

**கொழும்பு, ஓகஸ்ட் 15**
**நாட்டின் டொலர் பற்றாக்குறை நிலைமை இன்னும் மோசமடையலாம் என்பதால் அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிகளை மேலும் கட்டுப்படுத்தவேண்டுமென்று இலங்கை மத்திய வங்கி, நிதியமைச்சுக்கு அறிவித்துள்ளது.** 11 ➤

## இரு நாள்கள் 80 நிமிட மின்வெட்டு

கொழும்பு, ஓக.15
இன்றும், நாளையும் ஒரு மணிநேரம் 20 நிமிடங்களுக்கு (மொத்தமாக 80 நிமிடங்கள்) நாட்டில் மின்வெட்டுநடைமுறைப் படுத்தப்படுமென்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.
அனைத்து வலயங்களிலும் மாலை 5 மணி 11 ➤

## சர்வகட்சி ஆட்சி சர்வ நிச்சயமாம்



கொழும்பு, ஓக.15
சர்வகட்சி ஆட்சியை அமைப்பதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது என்று தெரிவித்துள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச சர்வகட்சி ஆட்சியில் சேர 11 ➤

அரச அதிகாரிகள்
## நீதித்துறையுடன் நேரடியாக தொடர்புகொள்வதற்குத் தடை

கொழும்பு, ஓக.15
நீதிபதிகள் மற்றும் நீதிச் சேவை ஆணைக்குழுவுடன் அரச அதிகாரிகள் நேரடியாகத் தொடர்புகொள்வதைத் தவிர்க்கவேண்டுமென்று அமைச்சின் செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.
அமைச்சு 11 ➤




செஞ்சோலைப் படுகொலையின் 16ஆவது ஆண்டு நினைவேந்தல் தமிழ் மக்களால் பல்வேறு இடங்களில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு முல்லைத்தீவு, வள்ளிபுனம், செஞ்சோலை வளாகத்தில் சிறிலங்கா விமானங்கள் நடத்திய குண்டுவீச்சில் 61 மாணவிகள் கொல்லப்பட்டனர். 150க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுக்கு உள்ளாகினர். (எ-இ)

## குழந்தைக்கு "பராக்கு" காட்டி தாயின் தங்கச் சங்கிலி அறுப்பு

நல்லூரில் கைவரிசை காட்டிய 39 வயதுப் பெண் கைது

யாழ்ப்பாணம், ஓக.15
நல்லூர் ஆலய வளாகத்தில் கைக்குழந்தையுடன் நின்ற பெண்ணின் தங்கச் சங்கிலியை அபகரித்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் 11 ➤

## நாட்டை மீட்கும் திட்டத்தை அடைகாக்கின்றார் ரணில்

ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக.15
ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டுக் குறிப்பிட்ட காலம் கடந்துள்ளபோதும், நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்கான திட்டங்கள் இன்னமும் 11 ➤

## யாழில் தொடர் வாள்வெட்டு: இளைஞர்கள் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஓக.15
யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு இடங்களில் நேற்று நடந்த வாள்வெட்டுச் சம்பவங்களில் இளைஞர்கள் இருவர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர். அவர்களின் ஒருவரின் விரல் துண்டாடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்தச் சம்பவங்கள் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 11 ➤

## மடுத் திருத்தலத்தின் திருவிழா இன்று

மன்னார், ஓக. 15
மன்னார், மடுத்திருத்தலத்தின் திருவிழா இன்று லட்சோபலட்சம் பக்தர்களின் பங்கேற்புடன் கோலாகலமாக இடம்பெறவுள்ளது.
கடந்த இருவருடங்களின் பின்னர் இந்தமுறை மடுப்பெருவிழா கோலாகலமாக இடம்பெறுகின்றமையால் பல 11 ➤

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# காலிமுகத்திடல் போராட்டத்துக்கு மேற்குலக நாடுகளே நிதியுதவி

## முன்னாள் எம்.பி. டியூ. குணசேகர தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 15**

**காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு மேற்குல நாடுகளே நிதியுதவி வழங்கின. அரச சார்பற்ற நிறுவனங்களின் பின்னணியில் இருந்து கொண்டு மேற்குலக நாடுகள்தான் இந்தப் போராட்டத்தை இயக்கின என்று தெரிவித்துள்ளார் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டியூ. குணசேகர.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ரஷ்யா - உக்ரைன் போர் மற்றும் சீனாவிடம் பெற்றுக்கொண்ட கடன் ஆகியன காரணமாகவே, எமது நாடு இன்று பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்துள்ளதாக பலரும் கூறுகின்றனர். உண்மையில் இது வேடிக்கையாகவுள்ளது. எமது நாடு சீனாவைவிடவும், ஜப்பானிடம் அதிக கடன் வாங்கியுள்ளது.

இவை அனைத்தையும் விடவும் நாம் உலக வங்கியிடம் 52 வீதமான கடனைப் பெற்றுள்ளோம். எம் மீது பெரும் கடன் சுமையை சுமத்தியது உலக வங்கியே ஆகும். அதன் காரணமாகவே எமது நாடு இன்று பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்துள்ளது.

எமது நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் மாற்றமடைய வேண்டும். இந்த முறைமையை மாற்றாது நாட்டை முன்னேற்றகரமான பாதைக்குக் கொண்டுச் செல்வது கடினமாகும். ஜே.ஆர். ஜெயவர்த்தன காலத்திலிருந்து காணப்பட்டுவரும் தவறான பொருளாதாரக் கொள்கைகளே தற்போது எமது நாடு பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுப்பதற்கு காரணம் - என்றார். (ம)

---

# புதிய பரிமாணத்தில் விரைவில் தேசிய அடையாள அட்டைகள்

கொழும்பு, ஓக. 15

நாட்டில் தேசிய அடையாள அட்டைகள் புதிய மாற்றங்களுடன் அறிமுகம் செய்யப்படவுள்ளன என ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயோமெட்ரிக்ஸ் தரவுகளை இணைந்து டிஜிற்றல் அடையாள அட்டைக் கட்டமைப்பை தயாரிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது தேசிய அடையாள அட்டையில் பொதுவான தரவுகள் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. இனிமேல் பயோமெட்ரிக் தரவுகள் அதாவது கைரேகைகள், குருதி விவரங்கள், கண் தரவுகள் ஆகியவை புதிய டிஜிற்றல் அட்டையில் சேர்க்கப்படவுள்ளது. எதிர்காலத்தில், இந்த பயோமெட்ரிக் தரவுடன் கூடிய தேசிய அடையாள அட்டையை வழங்கத் தொடங்குவோம் - என்றார். (ச-இ)

---

# இந்தியா, அமெரிக்காவுக்காக எமது கொள்கை மாறாது!

## சரத் வீரசேகர தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 15

**இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் தேவைக்கமைய எமது வெளிவிவகாரக் கொள்கையை மாற்றியமைத்துக்கொள்ள முடியாது. சீனக் கப்பலின் வருகைக்கு இந்தியா எதிர்ப்பை வெளியிடுவது அடிப்படையற்றது என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சீனக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அனுமதி வழங்கினார். தற்போதைய வெளிவிவகார அமைச்சர் அந்த அனுமதியை இரத்துச் செய்தால், அது இலங்கையை மலினப்படுத்தும் செயல். அவ்வாறு செய்யக்கூடாது. சீனக் கப்பலின் வருகையை இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளே எதிர்க்கின்றன. இந்த நாடுகளின் தேவைக்காக இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையை மாற்றியமைக்க முடியாது. சீனக் கப்பல் உளவு பார்ப்பதற்காகவே அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தருகிறது என இந்தியா குறிப்பிடுவது அடிப்படையற்றதாகும் - என்றார். (ம)

---

# சீனக்கப்பலை அனுமதித்ததால் கச்சதீவை திரும்பப் பெறுங்கள்!

## ராமதாஸ் வலியுறுத்து



கொழும்பு, ஓக. 15

**சீனாவின் கப்பல் தனது எல்லைக்குள் பிரவேசிக்க இலங்கை அனுமதி கொடுத்தமையானது, இந்தியாவுக்கு இலங்கை செய்த நம்பிக்கைத் துரோகம். இதனால் கச்சதீவை இந்திய அரசு திரும்பப் பெறவேண்டும் என்று தெரிவித்தார் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

இந்தியாவின் அழுத்தத்தைத் தொடர்ந்து சீன உளவுக் கப்பலுக்கு அனுமதி மறுத்த இலங்கை அரசு, இப்போது அதன் நிலையை மாற்றிக்கொண்டு சீன உளவுக்கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வர அனுமதித்திருக்கிறது. இலங்கை அரசின் செயல் மிகப்பெரிய நம்பிக்கைத் துரோகம்!

சீனக் கப்பல் இலங்கை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டால், தமிழகம் உள்ளிட்ட தென்மாநிலங்கள் உளவு பார்க்கப்படும் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும் என எச்சரித்த பிறகும் சீனக் கப்பலுக்கு இலங்கை அனுமதி அளித்துள்ளது. இலங்கையின் சீனா மீதான பாசத்துக்கு இதுதான் எடுத்துக்காட்டு.

இலங்கையின் வேண்டுகோளை ஏற்று அந்த நாட்டுக்கு டோர்னியர் 228 வகை போர் விமானத்தை இந்தியா இலவசமாக வழங்குகிறது. இப்படியாக இராணுவ உதவி, பொருளாதார உதவி அனைத்தையும் பெற்றுக் கொண்டுதான் இந்தியாவுக்கு இலங்கை துரோகம் செய்கிறது. இதுதான் அதன் குணம். இலங்கையின் துரோகத்தை இந்தியா புரிந்துகொண்டு அதற்கேற்ற வகையில் வெளியுறவுக் கொள்கையை வகுக்கவேண்டும் - என்றார். (ம)

---

# சீனக் கப்பலுக்கு அனுமதிமறுக்குக

## இலங்கைக்கு எதிராக வைகோ போர்க்கொடி

கொழும்பு, ஓக. 15

இந்தியாவை உளவுபார்க்க வரும் சீனக் கப்பலைத் தடுத்து நிறுத்தவேண்டும். துறைமுகத்தில் சீனக் கப்பல் நிறுத்தப்பட்டால், தமிழ்நாட்டில் உள்ள கல்பாக்கம் மற்றும் கூடங்குளம் போன்ற அணு ஆராய்ச்சி மையங்களை சீனாவால் கண்காணிக்க முடியும் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

'இலங்கையின் துறைமுகத்தில் சீனாவின் உளவுக் கப்பலை நிறுத்திக் கொள்வதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கி உள்ள தகவல் அதிர்ச்சியைத் தருகிறது. சீனாவின் ஆய்வு மற்றும் கண்காணிப்புக் கப்பலான யுவான் வாங்5, விண்வெளி மற்றும் செயற்கைக் கோள் கண்காணிப்பு தொழில்நுட்பத்தைக் கொண்டு வடிவமைக்கப்பட்டதாகும். இந்தக் கப்பலின் மூலம் வான்வெளியில் 750 கிலோமீற்றர் பரப்பளவுக்கு அதிகமாக உளவு பார்க்க முடியும் - என்றுள்ளது. (ம)

---

# இது நாடல்ல: வேட்டைக்களம்

## உறுதியற்ற தீர்மானத்தால் இந்தநிலை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 15

நாட்டில் தற்போது நிலவிவரும் உறுதியற்ற அரசியல் தீர்மானத்தாலும் மற்றும் வங்குரோத்து நிலைமைகள் காரணமாகவும் பலம்வாய்ந்த நாடுகளுக்கு வேட்டைக்களமாக இலங்கை மாறிவிட்டது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சி ஆதரவாளர்களுடனான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டமை அரசியலமைப்பு ரீதியாக சரியானது என்றாலும், அங்கீகாரம் மற்றும் மக்கள் அபிப்பிராயம் என்ற அடிப்படையில் இது முற்றிலும் மாறுபட்ட நிலையாகும். கடந்த காலங்களில் பெரும்பாலும் அரசியல் முடிவுகளை எடுப்பதில் முன்னுரிமை பெற்றது பெரியவர்களே. என்றாலும், இன்று இளம் தலைமுறையினர் அந்த இடத்தைப் பெற்றுள்ளனர்.

தேர்தலில் முடிவெடுப்பது குறித்து வீட்டில் செல்வாக்குச் செலுத்துவது இளைஞர் சமுதாயத்தினரின் எண்ணங்கள் மற்றும் விருப்பங்களின் பிரகாரமாகும். அவர்களின் எண்ணங்களையும் விருப்பங்களையும் புரிந்துகொள்ள வேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பு. 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 'ஐக்கிய பாதை'க்குப் பதிலாக 'தவறான பாதையை' தெரிவு செய்ததன் அவலத்தை இன்று நாடு எதிர்கொண்டுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் நாட்டைக் கட்டியெழுப்பும் ஆற்றல் ஐக்கிய மக்கள் சக்திக்கே உண்டு. எனவே ஓர் அணியாக இணைந்து நாட்டைக் கட்டியெழுப்பும் சவாலை நாம் ஏற்றுக்கொள்கின்றோம் - என்றார். (ம-14.இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐ.நா.வை எதிர்கொள்ள சிறப்புப் பொறிமுறை!

## நீதியமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 15

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் விசேட பொறிமுறையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கூட்டத்தொடரில் இலங்கையில் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் உள்ளிட்ட விடயங்களில் அடைந்துள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தனது விடயங்களை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வெளிப்படுத்தவுள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்பு தொடர்பில் செயற்படுகின்ற உள்நாட்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றங்கள், எதிர்காலத்திட்டங்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்படவுள்ளன.

குறிப்பாக, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுப் பணியகம் ஆகியவற்றைக் கிரமமாக முன்னெடுத்துச்செல்லல், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க நிறுவனத்தின் ஊடாக, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பி எதிர்கால ஐக்கியத்தை உருவாக்குவதற்கான செயற்பாடுகள் பற்றிய விடயங்கள் குறிப்பிடப்படவுள்ளன.

இதனைவிடவும் சட்டம், ஒழுங்கு மற்றும் அரசியலமைப்பு பற்றிய விடயங்கள் தொடர்பில் எடுத்துரைக்கப்படவுள்ளன. குறிப்பாக அரசமைப்பில் நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களை வழங்கும் வகையிலும் நிறைவேற்று அதிகாரத்தைக் குறைக்கும் வகையிலும் முன்மொழியப்பட்டுள்ள 22ஆவது திருத்தம் சம்பந்தமாகவும் குறிப்பிடப்படவுள்ளது.

இதற்காக அண்மையில் கலந்துரையாடலொன்றும் நடத்தப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம், வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு ஆகிய கட்டமைப்புக்களின் அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

அடுத்துவரும் காலப்பகுதியில் காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுப் பணியகம் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் நாட்டின் எதிர்காலத்துக்காக இந்தக் கட்டமைப்புக்கள் ஒன்றிணைந்துச்செயற்படவேண்டிய முறைமை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

விசேடமாக, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரை எதிர்கொள்வதற்காக, அதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து விசேட பொறிமுறையொன்று தாயரிக்கப்படவுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, ஒவ்வொரு இனங்களுக்குள் உள்ள கடும்போக்காளர்கள் இந்தவிடயங்களை முன்னகர்த்திச் செல்வதற்குத் தடையாக இருக்கின்றார்கள். ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையைப் பயன்படுத்தி தமது அரசியல் இலாபங்களை அடைவதற்கு விளைகின்றார்கள். பிரச்சினைகள் தீர்க்கப்படுவதை அவ்வாறானவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் பிரச்சினைகளை நீடித்து, தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ளவே முனைகின்றனர் - என்றார். (ம)

# வழிபடவேனும் அனுமதிக்குக!

## தாய்லாந்து அரசிடம் கோத்தா கோரிக்கை

கொழும்பு, ஓக. 15

மதத் தலங்களுக்குச் சென்று வழிபடவேனும் அனுமதியளிக்குமாறு தாய்லாந்தில் தஞ்சம் புகுந்துள்ள முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தாய்லாந்து அரசிடம் கோரியுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மக்களின் எதிர்ப்பால் கடந்த ஜூலை 13 ஆம் திகதி சிங்கப்பூர் சென்றடைந்த முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, தற்போது அங்கிருந்து தாய்லாந்துக்குச் சென்று தஞ்சமடைந்துள்ளார். தாய்லாந்தில் சுமார் 3 மாதங்கள் தங்கியிருக்க அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனினும் தாய்லாந்தில் தங்கியிருக்க அவருக்கு அந்த நாட்டு அரசாங்கத்தால் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. கோத்தாபய தங்கியுள்ள விடுதியை விட்டு வெளியே செல்ல வேண்டாம் என தாய்லாந்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையிலேயே, தாய்லாந்து அரசாங்கத்திடம் விகாரைக்குச் சென்று வழிபடவேனும் அனுமதிக்குமாறு கோத்தாபய ராஜபக்ச கோரியுள்ளார் என கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ச-இ)

# ரஞ்சனை விடுவிக்க பரிந்துரைகள் சமர்ப்பிப்பு!



கொழும்பு, ஓக. 15

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவதற்கான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் விவகார அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையை எதிர்பார்த்துள்ளோம். அறிவுறுத்தல்களைப் பெறுவது இதுபோன்ற ஒரு விடயத்துக்கு அவசியமில்லை. கொலைக்குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவர் தொடர்பிலேயே ஆலோசனை பெறவேண்டும். வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காகவே சட்டமா அதிபரின் ஆலோசனை நாடப்பட்டுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# மருந்து வகைகளுக்கு மீண்டும் தட்டுப்பாடு!

## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 15

நாடளாவிய ரீதியில் பல மருத்துவமனைகளில் மீண்டும் அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இதன் காரணமாக மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சைகளும் நிறுத்தப்பட்டுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே குறிப்பிட்டுள்ளார். மருந்துப் பொருள்களின் தட்டுப்பாடு தொடர்பில் அனைத்து மருத்துவமனைகளிலிருந்தும் அறிக்கை கோரப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-14,இ)

# இன்றுமுதல் நடைமுறையில் புதிய அஞ்சல் கட்டணங்கள்!

கொழும்பு, ஓக. 15

திருத்தப்பட்ட புதிய உள்ளூர் அஞ்சல் கட்டணங்கள் இன்று முதல் நடைமுறைக்கு வருகின்றது என அஞ்சல்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

அதன்படி 15 ரூபாவாகக் காணப்பட்ட சாதாரண அஞ்சல் கட்டணம் 50 ரூபாவாகவும், பதிவுத் தபால் கட்டணம் 30 ரூபாவிலிருந்து 60 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மேலும் அனுமதிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்க ளுக்கு வழங்கப்படும் அஞ்சல் சலுகை கட்டணமும் திருத்தப்பட்டுள்ளது. அதன்படி 20 கிராமுக்கு 12 ரூபாவாகக் காணப்பட்ட குறித்த கட்டணம் 30 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

மத்திய அஞ்சல் பரிமாற்ற நிலையத்தினால் பொறுப்பேற்கப்படும் கொழும்பு 1 முதல் 15 வரையான பிரதேசங்களுக்கு இடையிலான கடிதங்களுக்கான கட்டணம் 12 ரூபாவிலிருந்து 30 ரூபாவாகத் திருத்தப்பட்டுள்ளது.

அதேவேளை இதுவரை 10 ரூபாவாக இருந்த தபால் அட்டையின் விலை 20 ரூபாவாகவும், ஒருநாள் தபால் அடையாள அட்டை சேவைக் கட்டணம் 100 ரூபாவில் இருந்து 200 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன என அஞ்சல்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# மின்கட்டண உயர்வின் பின்னரும்கூட மின்சாரசபைக்கு ரூபா 45 பில். இழப்பு

கொழும்பு, ஓக. 15

சராசரியாக 75 வீதம் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தினாலும், மின்சார சபைக்கு வருடாந்தம் 45 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகின்றது. எனவே புதிய முறைமையில் உள்ள பிரச்சினைகள் குறித்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்படவுள்ளது என்று மின்சாரசபை தெரிவித்துள்ளது.

புதிய மின்கட்டண முறையின்கீழ் மின்சார வாகனங்களை சார்ஜ் செய்வதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட விசேட முறைமை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவால் நீக்கப்பட்டுள்ளது. இது குறித்து அடுத்தடுத்த நாள்களில் விவாதிக்கப்படும் என்றும் மின்சாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2,000 லீற்றருக்கும் மேற்பட்ட

# எரிபொருள் வைத்திருந்தவர் நீதிமன்றத்தினால் விடுவிப்பு

**யாழ்ப்பாணம், ஓக. 15**

**அனுமதிப் பத்திரம் இன்றி பெற்றோலை விற்பனை செய்ததோடு, மண்ணெண்ணெய், டீசல், பெற்றோல் என்பனவற்றை தனது உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் கைதுசெய்யப்பட்டிருந்த ஏழாலை-மயிலங்காட்டைச் சேர்ந்த நபரொருவர், மல்லாகம் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார்.**

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் குறித்த நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயிரத்து 660 லீற்றர் மண்ணெண்ணெய், 306 லீற்றர் பெற்றோல், 210 லீற்றர் டீசல் என்பன சான்றுப்பொருள்களாக வழக்கு விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்டன. அத்துடன் குறித்த நபர் 500 ரூபாவுக்கு 750 மில்லிலீற்றர் பெற்றோலை பொலிஸாருக்கு விற்றார் (பொலிஸாரின் நடவடிக்கையின் போது) என்று தெரிவித்து 500 ரூபா தாள் ஒன்றும் விசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட்டது

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் மற்றும் அவருடன் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் விசாரணையின் போது சாட்சியமளித்தனர்.

குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பெற்றோல் விற்பனை எதனையும் தான் மேற்கொள்ளவில்லை என்றும், விவசாய நடவடிக்கைகளுக்காகவே குறித்த எரிபொருள்களை தான் சேகரித்து வைத்திருந்தாகவும் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார். அத்துடன் விவசாயத் திணைக்களத்தால் தனக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் தனது இரண்டு மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டி, லாண்ட் மாஸ்டர் என்பவற்றின் பதிவுச் சான்றிதழ்களையும் அவர் சமர்ப்பித்தார்.

குறித்த நபர் பெற்றோலிய உற்பத்திப் பொருள்கள் சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்படவேண்டிய பாவனையாளராகக் கருதப்பட வேண்டும் என்றும், அந்த அடிப்படையில் எரிபொருள்களை அவர் தன்வசம் வைத்திருப்பது குற்றமாகாது என்றும் அவரின் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா வாதாடினார். மேலும் குற்றச்சாட்டுக்களில் உரிய சட்டப் பிரிவுகள் சரியாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இந்த வழக்கின் தீர்ப்பு நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது. இதன்போதே, வழக்குகளில் இருந்து சந்தேகநபர் விடுவிக்கப்பட்டதுடன், பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட எரிபொருள்களையும் மீண்டும் சந்தேகநபரிடம் ஒப்படைக்குமாறும் மன்று உத்தரவிட்டது. (ம-26)

# வெளிவந்தது 'வேடதாரி'

யாழ்ப்பாணம், ஓக. 15

புத்தாக்க அரங்க இயக்கத்தால் வெளியிடப்படும் 'வேடதாரி6' அரங்குக்கான இதழ், நாடகவியலாளர் கோ.சி.வேலாயுதம் சிறப்புப் பக்கமாக வெளிவந்துள்ளது.

பிரதம ஆசிரியர்கள் எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரைக் கொண்ட இந்த சஞ்சிகையில் பேராசிரியர் அ.இராமசாமி, பேராசிரியர் சி.மௌனகுரு, கலாநிதி சி.ஜெயசங்கர், எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன், குமரகுரு நிலுஜா, கலாபூஷணம் வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை, சுப்பிரமணியம் ஸ்ரீகாந்தலிங்கம், மல்லீஸ்வரி ஆதவன் ஆகியோரின் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ம-14)



# யாழ். போதனா மருத்துவமனையில் சுகாதார அமைச்சின் சிறப்புக் குழு

யாழ்ப்பாணம், ஓக. 15

சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன தலைமையிலான சுகாதர அமைச்சின் உயரதிகாரிகள் அடங்கிய குழுவினர் நேற்று யாழ். போதனா மருத்துவமனைக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அமைக்கப்பட்டுவரும் 8 தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் மற்றும் 4 பராமரிப்பு நிலையக் கட்டடத் தொகுதி ஆகியவை தொடர்பில் அவர்கள் நேரில் ஆராய்ந்தனர்.

160 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் குறித்த கட்டடத் தொகுதிகளை விரைந்து திறந்து வைப்பதற்கான நடவடிக்கை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (ச-இ)

# ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 15

அளவெட்டி- மாசியப்பிட்டிப் பகுதியில் ஹெரோய்னுடன் 26 வயதான இளைஞர் அண்மையில் கைதுசெய்யப்பட்டார் என்று தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமையவே குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் இருந்து 16 மில்லிகிராம் ஹெரோய்னை காங்கேசன்துறை சிறப்புக் குற்றத் தடுப்புப் பொலிஸார் கைப்பற்றினர். அதனையடுத்து மேலதிக விசாரணைக்காக இளைஞர் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (ம-14,23)



# திருட்டுக்களுடன் தொடர்புடைய நான்கு சந்தேகநபர்கள் கைது

கிளிநொச்சி, ஓக. 15

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நீண்ட காலமாகப் பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடைய நான்கு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது. அத்துடன் சந்தேக நபர்களிடமிருந்து, மோட்டார் சைக்கிள், இரண்டு சைக்கிள், தொலைக்காட்சிப் பெட்டி, மடிக்கணினி, சங்கிலி, இரண்டு தோடுகள், 7 லட்சத்து 50 ஆயிரம் பெறுமதிமிக்க 4 அலைபேசிகள் உள்ளிட்ட பல பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (ம-14,113)

# பெண் சுயமுயற்சியாளரை ஊக்குவிக்க 'சஞ்சீவி' விற்பனை நிலையம் ஆரம்பம்!

சாவகச்சேரி, ஓக. 15

யாழ். மாவட்ட பெண் சுயதொழில் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கவும், அவர்களின் உற்பத்திப் பொருள்களுக்கு சிறந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாகவும், 'சஞ்சீவி ' விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் அமைந்துள்ள அம்மாச்சி உணவகத்துக்கு அருகாமையில் இந்த நிலையம் திறக்கப்பட்டுள்ளது. அண்மையில் இடம்பெற்ற திறப்புவிழாவில், பிரதம அதிதிகளாக யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள வடமாகாணப் பணிப்பாளர் ராஜேந்திரா சசிலன், யாழ்ப்பாண விவசாயத் திணைக்கள மாகாண விவசாயப் பிரதிப் பணிப்பாளர் அஞ்சனாதேவி ஸ்ரீரங்கன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம-14,159)

## விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஓக. 15

மந்துவில் வடக்கில் மோட்டார் சைக்கிளுடன் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ச-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தடை நீக்கம் நிரந்தரமாகட்டும்

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீது விதிக்கப்பட்ட தடையை இலங்கை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்வதாக கடந்த ஜூன் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் அறிவித்திருந்தது. அதற்கு அமைவாக – ஒப்புக்கு – 6 அமைப்புக்கள் மீதான தடையை நீக்கியுள்ளது. இந்தத் தடை நீக்கம் வரவேற்கத்தக்கதுதான். ஆனால், ஐ.நா.வையும் தற்போதைய பொருளாதார நெருக்கடியையும் சமாளிப்பதற்கான தற்காலிக உத்தியாக அது அமைந்துவிடக்கூடாது.

2014 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவே போரின் பின்னர் முதன்முதலில் புலம்பெயர் அமைப்புக்களைத் தடை செய்தார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலும் சரி, சர்வதேச வெளியிலும் சரி இலங்கை அரசாங்கத்துக்கு குடைச்சல் கொடுத்துக் கொண்டிருந்தன இந்த அமைப்புக்கள். இலங்கையின் இறுதிக்கட்டப்போரின் போதான இனவழிப்புக்கு நீதி கோருவதில் இந்த அமைப்புக்களினதும், புலம்பெயர் தமிழர்களினதும் பங்குகள் அளப்பரியன. இதனால்தான் அந்த அமைப்புக்களை புலிச்சாயம் பூசி மஹிந்த ராஜபக்ச தடை செய்தார்.

2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் நல்லாட்சி அரசாங்கம் புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீதான தடையை நீக்கியது. அந்தக் காலத்தில் வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர இந்தத் தடை நீக்கத்தில் பெரும் பங்காற்றியிருந்தார். ஆனால், ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்த பின்னர் புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீதான தடைகள் மீண்டும் விதிக்கப்பட்டன. மிகவும் இறுக்கமாக அந்த அமைப்புக்கள் மீதான தடைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இலங்கைச் சிறைச்சாலையினுள் சந்தேகநபர்களாக இருப்பவர்கள்கூட ராஜபக்சக்களால் இந்தத் தடைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

பொருளாதார நெருக்கடியால் – அரசியல் ஆட்டம் கண்டபோது ராஜபக்சக்களின் கடைக்கண் பார்வை புலம்பெயர் தமிழர்கள் மீது திரும்பியது. புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகள் மூலமே நாட்டை மீட்டெடுக்கமுடியும் என்று ராஜபக்சக்கள் நம்பினார்கள். அதனால்தான் கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது கூட்டத் தொடரில் உரையாற்றிய அப்போதைய இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீதான தடையை நீக்குவது தொடர்பில் தமது அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது என்று குறிப்பிட்டிருந்தார். அதன் தொடர்ச்சியாகவே தற்போது அந்த அமைப்புக்களில் சிலவற்றின் மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

புலம்பெயர் தமிழர்களின் பொருளாதாரப் பலத்தின் காரணமாகவே இந்தத் தடைகள் இப்போது நீக்கப்பட்டுள்ளன என்பது பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் கருத்திலிருந்து வெளிப்படையாகத் தெரிகின்றது. 'புலம்பெயர் அமைப்புக்கள் மீதும் தனிநபர்கள் மீதும் தடையை வைத்துக்கொண்டு வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் உதவிகளை எதிர்பார்க்க முடியாது' என்று அவர் குறிப்பிடுவதன் ஊடாக தற்போதைய தேவையின் நிமித்தமே இந்தத் தடை தளர்த்தப்பட்டிருக்கின்றது என்பதை உணரமுடியும்.

இந்தத் தடை நீக்கம் நிரந்தமாகவேண்டும். தங்களின் தேவைகளுக்காக இந்தத் தடைகளை நீக்குவதும் பின்னர் தடைக்ளை நடைமுறைப்படுத்துவதும் மிகக் கேவலமான செயல்.

எனவே, ஆழ் மனதிலிருந்து – இனவாதச் சிந்தனையை விட்டெறிந்து – உண்மையான நல்லிணக்கத்தோடு புலம்பெயர் தமிழர்களுடன் கைகோர்க்க இலங்கை அரசாங்கம் முன்வரவேண்டும். அதைவிடுத்து தனியே பொருளாதார நலனுக்காகத்தான் இந்தத் தடை நீக்கம் எனில் அது ஒருபோதும் நாட்டுக்கு மீட்சியையோ, நல்லிணக்கத்தையோ கொடுக்காது. இதை இனியாவது இலங்கை அரசாங்கம் உணரவேண்டும்.

**நாளொரு நல்வார்த்தை**

"கடந்து போன நிமிடத்தை விலைக்கு வாங்கி அனுபவிக்க முடிகிற அளவுக்கு இந்த உலகில் யாரும் பணக்காரர்கள் கிடையாது" - **ஒஸ்கார் வைல்ட்**




# செஞ்சோலைப் படுகொலை: முல்லையில் நினைவேந்தல்



**முல்லைத்தீவு, ஓக. 15**

**செஞ்சோலை வளாகப் படுகொலையின் 16 ஆம் ஆண்டு, நினைவேந்தல் நிகழ்வு முல்லைத்தீவு - கள்ளப்பாடு வடக்குப் பகுதியில் அமைந்துள்ள முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.**

2006ஆம் ஆண்டு முல்லைத்தீவு - வள்ளிபுனம் செஞ்சோலை வளாகத்தில் இலங்கை வான்படை நடத்திய தாக்குதலில் 61 மாணவிகள் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலைகளின் நினைவேந்தலே நேற்று முன்னெடுக்கப்பட்டது.

உயிரிழந்த மாணவிகளுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு, மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலி நிகழ்ச்சிகள் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றன. இந்த அஞ்சலி நிழ்வில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-246)

# ரணிலை விமர்சிக்கும் அளவுக்கு சிறீதரனுக்கு அனுபவம் போதாது

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விமர்சிப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு அனுபவம் போதாது - இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.


கட்சி அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பலர் சமஷ்டியைப் பற்றி பேசியிருக்கலாம். தமிழ் மக்களுக்கு சமஷ்டி அடிப்படையில் தீர்வு தருவேன் எனத் தெரிவித்த முதலாவது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே. ஆயினும் அந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சமஷ்டித் தீர்வை விரும்பாததன் காரணமாக ரணில் விக்கிரமசிங்க தோற்கடிக்கப்பட்டார் - என்றார். (ச-இ)

16.09.2022
செவ்வாய்க்கிழமை
ஆடி 31

சுபநேரம் : 10.35 - 12.05
ராகுகாலம்: 03.05 - 04.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில், வட்டக்கச்சி சில்வா வீதியில் அமைந்துள்ள கலைவாணி சவாரித்திடலில் நேற்றுமுன்தினம் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி இடம்பெற்றது. போட்டியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பல போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். (ம-14,113)

### மசகு எண்ணெய் வந்தடைந்தது

# சபுகஸ்கந்தவின் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 15

**சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் அடுத்தவாரம் முதல் மீண்டும் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.**



ஒரு லட்சம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய் தாங்கிய கப்பல் நேற்று முன்தினம் இரவு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. அதன் மாதிரிப் பரிசோதனைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன் ரஷ்யாவில் இருந்து ஒரு லட்சத்து 20 ஆயிரம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய் தாங்கிய மற்றுமொரு கப்பல் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 29ஆம் திகதிக்குள் நாட்டை வந்தடையவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையப் பணிகள் மீண்டும் ஆரம்பமாகின்றன என எரிசக்தி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## மரவள்ளி செய்கைக்கு யாழில் அதிக ஆர்வம்

யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ்ப்பாணத்திலுள்ள விவசாயிகள் தற்போது மரவள்ளிச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மரவள்ளிக்கிழங்கின் விலை தற்போது சூடு பிடித்துக் காணப்படுகின்றது.

இதுவரை காலமும் இல்லாத விலைக்கு அவற்றின் விலை கிலோ 300 ரூபாவைத் தாண்டியுள்ளது. இந்த நிலையிலேயே மரவள்ளிச் செய்கையை மேற்கொள்ள செய்கையாளர்கள் ஆர்வம்காட்டி வருகின்றனர். இதனால், மரவள்ளித் தடிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14,17)

## காற்றுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஓக. 15

மத்திய, ஊவா, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாகப் பலத்த காற்றும் வீசக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்ட வானிலை அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோமீற்றர் வரை காணப்படும்.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது- என்றுள்ளது. (ம-14,இ)

## மரக்கறிகள் விலை திடீரென அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 15

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு மரக்கறி வகைகளின் விலை திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அனைத்து மரக்கறி வகைகளும் ஒரு கிலோ 200 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றன. கத்தரிக்காய், பாகற்காய், பயிற்றங்காய், மரவள்ளி உள்ளிட்ட மரக்கறிகளின் விலை அதிகரித்துக் காணப்படுவதோடு பிரதான சந்தைகளில் அவற்றுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு கூடுதலான மக்கள் மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்வதால் மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரித்ததோடு அவற்றுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-14,17)

### சுகாதாரப் பிரிவினரால்

## நல்லூர் ஆலயத்திலுள்ள கடைகளில் பரிசோதனை

நல்லூர் ஆலயச் சூழலிலுள்ள வர்த்தக நிலையங்களில் சுகாதாரப் பிரிவினரின் கண்காணிப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

உணவகங்கள், தேநீர்க் கடைகள், ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் போன்றவற்றில் சுகாதார நடைமுறைகள் குறித்து கண்காணிப்புச் சோதனை நடவடிக்கைகள் திடீரென முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் ஆலயச் சூழலிலுள்ள வர்த்தக நிலையங்கள் போன்றவற்றில் உரிய சுகாதார விதிகளைப் பின்பற்றவேண்டுமெனவும் உணவகங்களில் உணவுப் பொருள்கள், சிற்றுண்டி வகைகள் போன்றவற்றைப் பாதுகாப்பான முறையில் பேணவேண்டுமெனவும் சுகாதாரப் பிரிவினர் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (ம-14,17)

## சேவைநலன் பாராட்டு

கொடிகாமம், ஓக. 15

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் ஆரம்பப் பிரிவு ஆசிரியை திருமதி உமாதேவி ஜெயவீரசிங்கத்துக்கு கல்லூரியால் சேவைநலன் பாராட்டு நிகழ்த்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் இன்று திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-159)

## மட்டு.இராமகிருஷ்ணமட சுவாமி நல்லூர் ஆலயத்தில் தரிசனம்



யாழ்ப்பாணம், ஓக. 15

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா இடம்பெற்றுவரும் நிலையில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மட சுவாமி ஸ்ரீ நீலமாதவானந்த மகராஜ் சுவாமிகள் நல்லைக் கந்தன் ஆலயத்துக்கு நேற்று வருகை தந்து தரிசனம் மேற்கொண்டுள்ளார்.

[illegible] பிரமாச்சாரி சுவாமிகள், சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் மற்றும் சமயத்தலைவர்கள் உள்ளிட்ட பலரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## நமசிவாயம் ஜெகதீஸ்வரன் (ஈசன்)



யாழ். சங்கானை அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris ஐ வசிப்பிட மாகவும், தற்போது பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் ஜெகதீஸ்வரன் அவர்கள் கடந்த (04-08-2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம், பூமணி (கனடா) தம்பதிகளின் அன்பு மகனும், யாழ். பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம், தங்கேஸ்வரி தம்பதி களின் அன்பு மருமகனும், நிர்மலா அவர்களின் அன்புக் கணவரும், அனுஷன் அவர் களின் பாசமிகு தந்தையும், அன்னலஷ்சுமி (செல்வி - கனடா), காலஞ்சென்ற மகேஷ்வரன், ஜெயராணி (கனடா), திருமால் (லண்டன்), கெங்காதரன் (சிவா - லண்டன்), ஜெயதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், உதயநேசன் (கனடா), யோகமாலினி (பிரான்ஸ்), சுரேஸ் (கனடா), தயாளினி (லண்டன்), குமுதினி (லண்டன்), பாலேஸ்வரன் (லண்டன்), சிவராஜ் - விஜயா (நியூசிலாந்து), மோகன்- திலகா (இலங்கை), அருள் - ரேவதி (இலங்கை), விமலா - சூரி (சுவிஸ்), ராஜன் (இலங்கை), காண்டீபன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆரபி, ஆரிஸ், அஞ்சலன், ஆதிரா, ஆதித்தியா ஆகியோரின் அன்பு மாம நாரும், ராகுல், அஸ்வின் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், அபிநாஸ், அக்ஷயா, ஆத்விக் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், அலெக்சனா, நிரோஷ், ரிதுசன், நிந்துஷா ஆகியோரின் அன்பு மாமாவும், அர்ச்சனா, அபிநயா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

**பார்வைக்கு**
Saturday, 13 Aug 2022 4:00 PM - 8:00 PM 445 Kenton Rd, Harrow HA3 0XY, UK

**இறுதிக்கிரியைகள்**
Tuesday, 16 Aug 2022 11:30 AM - 3:00 PM 366A Stag Ln, London NW9 9AA, United Kingdom

**தகனம்**
4:00 PM - 5:00 PM Holders Hill Rd, London NW7 1NB, UK,

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:

| | | |
|---|---|---|
| நிர்மலா | - மனைவி | Mobile : 0044 7405 428 872 |
| உதயநேசன் | - மைத்துனர் | Mobile : 001 416 648 13 94 |
| கொங்கன் (சிவா) | - சகோதரன் | Mobile : 0044 7852 183 561 |
| திருமால் (திரு) | - சகோதரன் | Mobile : 0044 7917 800 774 |
| பாலேஸ் | - மைத்துனர் | Mobile : 0044 7919 371 907 |
| காண்டீபன் | - மைத்துனர் | Mobile : 0094 7708 72182 |

தோற்றம் 08.08.1964 மறைவு 04.08.2022

(Cr.37047) (3/6)

# மரண அறிவித்தல்



## திருமதி பாலசிங்கம் செல்வரத்தினம் (ராசாத்தி)

**(இவர் 1966 – 1993 வரை இலங்கை கனிப்பொருள் கூட்டுத்தாபன அருகாமையில் உள்ள முஸ்லீம் மகாவித்தியாலயத்தில் 27 ஆண்டுகள் கடமையாற்றி இளைப்பாறிய ஆசிரியர்)**

டச்சுவீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடப்பிமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் செல்வரத்தினம் நேற்று (14.08.2022) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தீர்க்க சுமங்கலியாக இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிதம்பரம் தம்பதி களின் மகளும், செல்லப்பா - சின்னம்மா தம்பதி களின் மருமகளும், பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர் களான வள்ளி முத்து, கைலாயபிள்ளை, கனகரட்ணம், சின்னப்பிள்ளை (அம்மா) கார்த்திகேசு, மகேஸ்வரி (மணி) ஆகியோரின் சகோதரியும், காலஞ் சென்றவர்களான பூங்கோதை, பத்மநாதன், கனகலிங்கம் மற்றும் துரைராஜா, ராஜேஸ்வரி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனியும், கவிதா, பார்த்தீபன், பிருந்தாபன் ஆகியோரின் பெரியம்மாவும், அனோஜன், கமலேஸ்வரன் (கண்ணன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2022) திங்கட் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

(CR 37052) (3/6)

தோற்றம் 01.06.1935 மறைவு 14.08.2022

077 691 1678
076 235 3575

**தகவல்:**
**பாலசிங்கம் குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மண்ணில் 28 . 06 . 1952

விண்ணில் 14 . 08 . 2022

## தெய்வேந்திரம் சரஸ்வதி

முருகமூர்த்தி கோவிலடி, கூழாவடி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் சரஸ்வதி நேற்று (14.08.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், நாகேஸ்வரி, நாகரத்தினம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுதர்சினியின் பாசமிகு தாயாரும், பார்த்தீபன் (அகிலன்) இன் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்காளன தேவதாஸ், தவராசா மற்றும் செல்வராணி, பரஞ்சோதி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்.காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
ந.பார்த்தீபன்
(மருமகன்)

முருகமூர்த்தி கோயிலடி,
கூழாவடி ஆனைக்கோட்டை. (cs.45969) (2.6)

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 03 - 04 - 1956

ஆண்டவன் அடியில் 09 - 08 - 2022

## திரு. வேதவனம் தயாநிதி [துயா]

யாழ். கோப்பாய் வடக்கு, பிராமணோடையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Bobigny ஐ வதிவிடமாகவும் கொண்ட வேதவனம் தயாநிதி அவர்கள் கடந்த (09.08.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதவனம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் (ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்கள்) சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயராணி (சச்சி) அவர்களின் ஆருயிர்க் கணவனும், ஜனனி, கீர்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சத்தியபாமா (இலங்கை), சரவணபவன் (கனடா), கோமளேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்பிற்கினிய சகோதரரும், குமாரதாசன் (இலங்கை), கலா (கனடா), சிவனேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கதீஸ், மாதுசன் ஆகியோரின் அன்புக்குரிய மாமனாரும், மனீஷா, நவீனா, லவீன் ஆகியோரின் ஆசைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2022) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு (இலங்கை நேரம் பிற்பகல் 12.30) 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France இல் நடைபெற்று அதேயிடத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
சத்தியபாமா குமாரதாசன்
(சகோதரி) 077 044 9243

இல.102, A9 வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(CR 37653) (3.6)

# விசேட தேவையுடையோருக்கு சூழகம் அமைப்பால் உதவிகள்



யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் மறுவாழ்வு நிலையத்தில் உள்ள சிறப்புத் தேவையுடையவர்களுக்கு, சூழகம் அமைப்பால் உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு சூழகம் அமைப்பின் செயலாளர் கருணாகரன் நாவலனின் ஏற்பாட்டில், உலருணவுப் பொதிகளும் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா நிதியுதவியும் ஜெய்ப்பூர் நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் மறுவாழ்வு நிலையத்தில் கடமையாற்றுகின்ற 11 ஊழியர்களுக்கும் 60 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க உலருணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. (ம-14)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 16.04.1953

விண்ணில் 27.07.2021

## அமரர் ஆறுமுகம் ஜீவானந்தன் (ஜீவன்)

கண்ணில் கருணையையும் இதயத்தில் பாசத்தையும்
வைத்திருந்து எமக்காக வாழ்ந்த எம் அப்பாவே
இனிய நினைவுகளோடு ஈடில்லா வாழ்வுதந்து
இடையே எம்மை தவிக்க விட்டு சென்றீரோ
தினந்தோறும் உங்கள் திருமுகம் காண ஏங்குகின்றோம்.

எமது குடும்பத்தலைவரை இழந்து தவித்தபோது பல வழிகளிலும் ஆறுதல் அளித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றிகள். அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.
077 670 7919

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs.45968) (2.6)

# மரண அறிவித்தல்



பிறப்பு 09 . 10 . 1974

இறப்பு 14 . 08 . 2022

## செல்வி தர்மினி நாகராஜா

வீமன்காமம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் ஐ வதிவிடமாகவும் கொண்ட தர்மினி நாகராஜா நேற்று (14.08.2022) ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராஜா - பத்மலீலா தம்பதியரின் பாசமிகு மகளும், ஜெயரஞ்சினி (பபா, ஜேர்மனி), காலஞ்சென்ற பாஸ்கர், சுதாகர் (ஜேர்மனி), திவாகர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும். இது பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னு சிமா வீதி,
வீமன்காமம்,
தெல்லிப்பழை. (cs.20308) (2.7)

தகவல்:
குடும்பத்தினர்
077 244 2898

# விடுதலை கோரி உச்சநீதிமன்றில் நளினியும் மனு

புதுடில்லி, ஓக. 15

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து தன்னை விடுதலை செய்யுமாறு கோரி உச்சநீதிமன்றத்தில் நளினி மனு தாக்கல் செய்துள்ளார். பேரறிவாளன் விடுதலை வழக்கின் தீர்ப்பிலுள்ள அம்சங்களைச் சுட்டிக்காட்டி நளினி மனு தாக்கல் செய்துள்ளார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதான 7 பேர்களில் ஒருவரான நளினி கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக வேலூர் சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி.லக்சலா சகாயசீலன்



புனித ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 45, முதலியார் வீதி, அரியாலை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.லக்சலா சகாயசீலன் அவர்கள் 13.08.2022 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாவீது பொன்னுத்துரை மேரிதிரேசா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை யோசேப் மற்றும் சிவபாக்கியம் தம்பதியரின் மருமகளும், யோசேப் சகாயசீலன் (இராசன்- உரிமையாளர்.ஞானம்ஸ் ஸ்ரோஸ் வாடியடி, பூநகரி) அவர்களின் அன்பு மனைவியும், டெனிற்றா (மாணவி SLIIT Malabe Campus), தனுஷ்பிரியா (உயர்தர மாணவி- திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்), லசானி (மாணவி தரம் 7- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், எமில் ராஜசிங்கம் (பிரான்ஸ்), யஸ்ரின் (குமாரசாமி ரெக்ஸ்ரைல்), கசில்டா விக்ரர் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கசில்டா எமில் (பிரான்ஸ்), டிலானி, விக்ரர் (சுவிஸ்), றெஜீனா அருந்தமிழ்ச்செல்வன், பெனடிக்ற் (ரவி - ஜென்சி ஹாட்வெயார்.கிளிநொச்சி), தேவி (ஜேர்மனி), சீலன் (கல்வித்திணைக்களம், திருக்கோவில்), சுசி, வசந்தி,, சசி (ஆசிரியை, திருவையாறு ம.வி), சுசீலன்(U.K) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் பனுஷ்கா, பவியன், பியோனா, டிலான், ரிசான், மிரோன், நிரோஜன், கஜீவன், சஜீவன், குலதீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும் செலினா, டெரினா, அஸ்வின் ஆகியோரின் அன்புக்குரிய சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று (15.08.2022) திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் அஸ்தியானது இறுதி ஆசீர்வாதத்திற்காக நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தொடர்ந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மண்ணில்**
**01.10.1977**

**விண்ணில்**
**13.08.2022**

45, முதலியார் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
யோ.சகாயசீலன்
077 787 0316



பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை உறுப்பினர் எஸ்.ஜெயந்தனின் ஏற்பாட்டில், தொல்புரம் மத்தியில் அமைந்துள்ள சக்தி முன்பள்ளியில் தெரிவு செய்யப்பட்ட 25 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. உதயன் குழுமத்தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் மேற்படி உபகரணங்களை வழங்கினார். (ய-125)



தென்மராட்சி பிரதேச செயலகத்தால் ஆண்டு தோறும் நடத்தப்படும் விளையாட்டு விழாவின் ஒரு பகுதியான கால்பந்தாட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகம் சம்பியனானது. அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் அன்னை விளையாட்டுக் கழகத்தை 3:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியே சரஸ்வதி அணி சம்பியனானது. (ம-159)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** செயல்களில் முன்னேற்றம் காண்பீர்கள். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் இருந்து வந்த தடை விலகும். திடீர் வரவு மகிழ்ச்சியை உண்டாகும்.

**இடபம்:** துணிச்சலாகச் செயற்பட்டு நினைத்ததைச் சாதிப்பீர்கள். புதிய பொறுப்புகள் உங்களைத்தேடி வரும். பணிபுரியும் இடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும்.

**மிதுனம்:** உங்கள் முயற்சியில் சிறு தடை ஏற்படும்.கவனமுடன் செயற்படுங்கள். எதிர்பார்த்த தகவல் தாமதமாகும். உங்கள் செயல்களில் இன்று அவசரம் வேண்டாம்.

**கடகம்:** சிலரின் நடவடிக்கையால் சோர்வு ஏற்படும். அமைதி காப்பது நல்லது. பிறருக்கு அறிவுரை கூற வேண்டாம். உங்களைச் சுற்றி இருப்பவர்களில் நல்லவர் யார் என்பதை தெரிந்துகொள்வீர்கள்.

**சிம்மம்:** சங்கடங்களில் இருந்து விடுபடுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த செயலில் இலாபம் காண்பீர்கள். பிரச்சினைகளைச் சமாளிப்பீர்கள். உறவினர்களுடன் சுற்றுலா செல்வீர்கள்.

**கன்னி:** உங்களுடைய செயல்களில் இன்று வேகமும் விவேகமும் இருக்கும். நினைத்ததைச் சாதிப்பீர்கள். சோர்வு விலகி உற்சாகமாகச் செய[illegible] பட்ட சங்கடம் காணாமற்போகும்.

**துலாம்:** நினைத்தது ஒன்று நடப்பது ஒன்றாக இருக்கும். செயல்களில் தடையும்,தாமதமும் ஏற்படும்.எதிர்பார்த்தவற்றில் ஏமாற்றம் உண்டா கும். குடும்பத்தினரின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

**விருச்சிகம்:** பணியில் இருப்பவர்கள் கவனமுடன் செயற்பட வேண்டிய நாள். பொறுமை அவசியம். முயற்சியில் தடை ஏற்பட்டு பின்னர் நிறைவேறும். பிறரிடம் பேசுவதில் கவனம் தேவை.

**தனுசு:** தடைபட்டிருந்த பணம் இன்று உங்கள் கைக்கு வரும். அதிர்ஷ்டமான நாள். இன்று நினைத்ததைச் சாதிப்பீர்கள். உங்களின் தனித்திறமை வெளிப்படும். மற்றவரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** தொழிலில் புதிய முதலீடு செய்வது பற்றிய எண்ணம் இப்போது வேண்டாம். இலாபம் அதிகரிக்கும். மற்றவர்களின் நெருக்கடியால் சங்கடம் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் குழப்பம் உண்டாகும். திட்டமிட்டுச் செயற்படுவதால் சங்கடம் குறையும். குழப்பங்களைத் தவிர்ப்பதால் முயற்சி வெற்றியாகும். சிந்திக்க வேண்டிய நாள். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்:** வெளியூர்ப் பயணங்களால் சங்கடத்தை சந்திப்பீர்கள். செலவுகள் பல வழியில் உண்டாகும். கோயிலுக்கு குடும்பத்துடன் சென்று வருவீர்கள். வீண்செலவு அதிகரிக்கும். திடீர் செலவு உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு



## திருமதி உமாதேவி ஜெயவீரசிங்கம்

(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி கல்விமாணி (B.ed)

**சேவைக்கால விபரம்**

- யா/ வரணி வடக்கு, சைவப்பிரகாச வித்தியாலயம் - 17.08.1988 - 19.01.1992
- யா/ கோப்பாய் ஆசிரியர் கலாசாலை - 20.01.1992 - 31.12.1993
- யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி - 01.01.1994 - 31.12.1994
- யா/ வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம் - 01.01.1995 - 31.03.1999
- யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி - 01.04.1999 - 02.01.2005
- யா/ வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம் - 03.01.2005 - 09.10.2005
- யா/ மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம் - 10.10.2005 - 08.02.2015
- யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி - 09.02.2015 - **இன்று வரை** (15.08.2022)

ஒய்வு காலத்தில் சகல வளமும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்

**வட்ட மேசை**

**யா / சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி**

(cr 37047) (2.7)

# நாட்டின் பொருளாதார மீட்புக்காக சாம்சங் உரிமையாளருக்கு தெ.கொரியா பொதுமன்னிப்பு

ஊழல் வழக்குக் குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்ட சாம்சங் நிறுவனத்தின் உரிமையாளர் லீ ஜே யங்க்கு தென்கொரிய ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார். சாம்சங் நிறுவனத்தின் உரிமையாளரும் உலகின் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவருமான லீ ஜே யங் உலகின் 278ஆவது பணக்காரர்களில் ஒருவராவார்.

இவர் மீது கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதையடுத்து வழக்கின் தீர்ப்பு அவருக்குப் பாதகமாக வெளியானது. இதனையடுத்து அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இந்தநிலையில் தென்கொரிய ஜனாதி பதி தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி சாம்சங் உரிமையாளர் லீ ஜே யங்க்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுவித்துள்ளார்.

தென்கொரியாவின் பொருளாதார வளர்ச்சியை நிலை நிறுத்தும் முகமாக அவருக்கு இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது எனத் தென்கொரியாவின் சட்டத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

(ச-இ)

# மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 06 . 1944

இறப்பு 12 . 08 . 2022



## திருமதி புஷ்பாம்பிகை குலசேகரம்

யாழ்.குரும்பசிட்டியை சேர்ந்த திருமதி.புஷ்பாம்பிகை குலசேகரம் அவர்கள் கடந்த 12.08.2022 இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2022) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்
ஈஸ்வரகுமார்
சாந்தகுமார்
சந்திரகுமார்
மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்

குரும்பசிட்டி
076 547 2808

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27.01.1947

மறைவு 26.08.2021



புலோலி தெற்கு பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் தம்புகமம் D4 மருதநகரை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

## இராசேந்திரம் இரத்தினமணி

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தின நிகழ்வு இன்று (15.08.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புலோலி தெற்கு,
பருத்தித்துறை

குடும்பத்தினர்
தந்தை,
மகன்மார்கள் (இ.சத்தியரூபன்),
(Varaththana Cleaning Service pvt.ltd)
மகள்மார்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 - 08 - 1954

மறைவு 12 - 08 - 2022



## முத்தையா தங்கமணி

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா தங்கமணி அவர்கள் கடந்த 12.08.2022 இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா பாக்கியம் அவர்களின் மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு ஆச்சிப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மனைவியும் அமரர் பரிமளம், அமரர் கனகம்மா, அமரர் அன்னபூரணம், அமரர் மயில்வாகனம், கோமளேஸ்வரி, புனிதராணி, மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி, தில்லைநாதன், பொன்னையா, கனகசபை, பாலசிங்கம், ஆறுமுகநாதன் மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் நளினி (சுவிஸ்), தயாளன் (லண்டன்), நந்தினி (ஆசிரியை), அம்சத்வனி (பாரிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சசிதரன் (சுவிஸ்), கிருசாந்தி (லண்டன்), அமரர் சர்மிலன், சிவகுமார் (பாரிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜதுர்சா, மிருதுலா, கஜீஸ், சஞ்சித், திலோச், அபிஸ்நயா, சாருஜன், சரண், சரீஸ் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
075 894 9079

# மரண அறிவித்தல்



## திரு.வேலுப்பிள்ளை சோமசுந்தரம்

(முன்னாள் துர்க்காஸ் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் – புன்னாலைக்கட்டுவன்)

**தோற்றம் :19.03.1949 மறைவு: 14.08.2022**

23, ஒட்டுமடத்தை பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திரு.வேலுப்பிள்ளை சோமசுந்தரம் அவர்கள் நேற்று (14.08.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு-தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், இராசநாயகம், நாகராசா, அகிலாண்டேஸ்வரி மற்றும் லோகேஸ்வரி, மங்களேஸ்வரி, காலஞ்சென்றவர்களான இராஜேந்திரன், இராஜமலர் மற்றும் பத்மதேவி, சிவநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிரிசாந்தி (உதவி முகாமையாளர் - கார்கில்ஸ் பூட் சிற்றி, யாழ்ப்பாணம்), நிலானி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் -பிரதிப்பணிப்பாளர் அலுவலகம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்) மற்றும் காலஞ்சென்றவரான அருண்பிரசாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr.க.ஜீவகுமார், ஜெயகாந்த் (பிரதேச செயலாளர், புதுக்குடியிருப்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிரோஷிகா, லோஷன் காந்த், லக்ஸ்மன் காந்த், ரோஷன்காந்த் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2022) திங்கட்கிழமை மதியம் 1.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 019 1603, 077 835 7841, 077 076 3082

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்களுக்கு அதிக கட்டணம் அறவீடு; பாதுகாப்பு நிலையம் சீல்'

யாழ்ப்பாணம், ஓக.15

நல்லூர் ஆலய சுற்றாடலில் யாழ்ப்பாணம் மாநகர சபையால் அனுமதிக்கப்பட்ட தொகையைவிட அதிக தொகையை அறவிட்ட வாகனப் பாதுகாப்பு நிலையமொன்று மாநகர சபையால் மூடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வீதியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக வாகனப் பாதுகாப்பு நிலையத்தில் அதிக தொகை அறவிடப்படுகின்றது என்று பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்தே குறித்த வாகனப் பாதுகாப்பு நிலையத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சைக்கிள் ஒன்றுக்கு 20 ரூபாவும், மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு 30 ரூபாவும், முச்சக்கர வண்டி மற்றும் கார் ஆகியவற்றுக்கு 50 ரூபாவும், வான் ஒன்றுக்கு 100 ரூபாவும் அறவிடப்பட வேண்டும் என்றும் யாழ்ப்பாணம் மாநகர சபையால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிர்ணயக் கட்டணங்களுக்கு அதிகமாகப் பக்தர்களிடம் கட்டணம் அறவிடப்பட்டாலோ, மாநகர சபையின் அங்கீகாரம் பெறாத சிட்டைகள் வழங்கப்படுவது கண்டறியப்பட்டாலோ அந்த வாகனப் பாதுகாப்பு நிலையங்கள் உடனடியாக மூடப்படும் என்று யாழ்ப்பாணம் மாநகர சபை அறிவித்துள்ளது.

(அ-எ-26-27)

## நாட்டை...

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியின் கொள்கை உரையில் ஒரு வரையறையையும் கொள்கைகளையும் முன்வைத்திருந்தாலும் என்ன செய்ய வேண்டும்?, யார் செய்ய வேண்டும் என்பது தொடர்பாக இதுவரை எவருக்கும் தெளிவுபடுத்தப்படவில்லை. அதனால், கடன் பொறியில் இருந்து மீள பொருளாதாரத்தை மீட்டெடுக்க இடைக்கால நிரந்தர அபிவிருத்திக்கான திட்டத்தை முன்வைக்க வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.

பொருளாதாரத்தை குறுகிய காலத்துக்கு கட்டியெழுப்புவதற்கு எதிர்க்கட்சி 10 விடயங்கள் அடங்கிய பொது வேலைத்திட்டத்தை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமைப்பு ரீதியான மாற்றத்தை எதிர்பார்த்த போதும், அப்படியான எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ராஜபக்சவினின் ஆவிகள் ஊடாக அரசாங்கம் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதை காணக்கூடியதாக இருக்கின்றது.

அதேவேளை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு முதல்முறையாக நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவர் பதவியை வழங்கியமை தொடர்பாக மகிழ்ச்சியடைகின்றேன். அதன் ஊடாக தேவையான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த நான் நடவடிக்கை எடுப்பேன். நாட்டை கட்டியெழுப்ப அமைச்சராக வேண்டும் என்ற தேவையில்லை என்பதை இந்தப் பதவியின் மூலம் நிரூபித்துக் காட்ட எதிர்பார்த்துள்ளேன்.

தற்போதைய நாடாளுமன்றம் உண்மையாக மக்களின் ஆணையைப் பிரதிபலிக்கவில்லை. உண்மையானமக்களின் ஆணையைப் பிரதிபலிக்கும் நாடாளுமன்றம் எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குப் பின்னர் தெரிவு செய்யப்படும்வரை இந்தப் பங்களிப்பை வழங்குவேன் - என்றார். (அ-எ-இ)

## தடை...

தொடர்ந்தும் தடையில் உள்ள ஏனைய புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் தொடர்பிலும் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசாங்கம், சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் சிலர் மீதான தடையை நீக்கியுள்ளது. இது தொடர்பில் கருத்துக் கேட்டபோதே இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இது நல்லதொரு விடயம். அரசின் இந்த நடவடிக்கையை வரவேற்கின்றோம். பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கையின் மீள் எழுச்சிக்குப் புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு மிகவும் அத்தியாவசியம். இதனை உணர்ந்து சில புலம்பெயர் தமிழ் அமைப்புகளினதும், தனிநபர்களினதும் தடையை இலங்கை அரசு நீக்கியுள்ளது. நாட்டின் நலன் கருதி அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கையை வரவேற்கின்றோம்.

அதேவேளை, தொடர்ந்தும் தடையில் உள்ள ஏனைய புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் தொடர்பிலும் இலங்கை அரசு கவனம் செலுத்த வேண்டும். புலம்பெயர் தமிழர்களுடன் இலங்கை அரசு நெருக்கமாகப் பேசி நாட்டுக்காக அவர்களின் உதவிகளைப் பெறவேண்டும் - என்றார். (அ-எ-22)

## குழந்தைக்கு...

கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் இருந்து 4 லட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைக்குழந்தை அழுவதை அடுத்து, குழந்தையைப் பார்த்துக்கொள்கின்றேன் என்று கூறிப் பாசாங்கு செய்த பெண் ஒருவர் திடீரென தாயின் கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளார். சங்கிலியைப் பறிகொடுத்த பெண், இது தொடர்பில் நல்லூர் உற்சவகாலப் பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் 39 வயதுப் பெண் ஒருவரைப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். சந்தேகநபரிடம் இருந்து தங்கச் சங்கிலி மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## நீதித்துறையுடன்...

செயலாளர்கள், மாகாணங்களில் உள்ள பிரதம செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு அடுத்தவாரம் இது தொடர்பான சுற்றறிக்கை வழங்கப்படவுள்ளது.

வழமையான விடயங்கள் தொடர்பாக அவர்கள் சட்டமா அதிபருடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும், எனினும் ஏனைய விடயங்கள் ஜனாதிபதி செயலகத்தின் ஊடாகவே தெரிவிக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதித்துறைச் செயற்பாட்டின் ஒரு பகுதியாக இருக்கும் அரச அதிகாரிகள், நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுடனான வழக்கமான தொடர்புகளை மேற்கொள்ள முடியாது என்றும் நீதித்துறை விவகாரங்களில் தேவையற்ற தலையீடுகளைத் தவிர்ப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் அமைச்சின் செயலாளர் ஒருவர் பிரதம நீதியரசருக்கு நேரடியாகக் கடிதம் எழுதிய சம்பவமே, அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுக்க முக்கியமான காரணம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-எ-இ)

## பெற்றோலுக்கு...

அதனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலை அனைவரும் தடையின்றிப் பெறக்கூடிய நிலைமை தோன்றியுள்ளது என்று எரிபொருள் நிரப்பு நிலையத் தரப்புகள் தெரிவித்தன.

அதேவேளை வாரத்தில் குறிப்பிட்ட அளவு எரிபொருளையே ஒருவர் கொள்வனவு செய்ய முடியும் என்பதால், நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டாலும், ஏராளமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல், டீசல் என்பன விற்பனை செய்யமுடியாமல் தேங்கி இருப்பதால், புதிதாக எரிபொருளைக் கொண்டுவரமுடியாதிருப்பதாகவும், இதனால் தமது வழமையான விற்பனை இலாபம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-17)

## கொரோனா...

முன்தினம் சுகாதார சேவைகள் பணிப்பாளரால் உறுதி செய்யப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்கள் 60 வயதுக்கு மேற்பட்ட ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் என்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உயிரிழப்புகளுடன் நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 621 ஆக உயர்ந்துள்ளது. (அ-எ-இ)

## சர்வகட்சி...

விரும்பும் கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

சர்வகட்சி ஆட்சிக்கு ஏதேனும் அரசியல் கட்சி எதிர்ப்புத் தெரிவித்தால் எங்களுக்கு வேறு வழியில்லை. சேர விரும்பும் அரசியல் கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைப்போம்.

இது அனைத்துக் கட்சியாக இல்லாமலும் இருக்கலாம். ஆனால், பல கட்சிகளின் ஆதரவைப் பெற முயற்சிக்கின்றோம். சர்வகட்சி ஆட்சியை அமைப்பதற்கும், புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கும் தொடர்பு இல்லை - என்றார். (அ-எ-22)

## 2,500 பொருள்களின்...

நாட்டின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பின் தாக்கம் எதிர்காலத்திலும் மோசமாக இருக்கும் என்றும் இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

எரிபொருள், மருந்து மற்றும் அத்தியாவசியமானவைப் பொருள்களின் இறக்குமதிக்காகடொலரைத்தக்கவைக்கவேண்டும் என்பதால், அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதியில் கண்டிப்பாகக்கட்டுப்பாடுதேவை என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் அத்தியாவசியமற்ற பொருள்களின் மூன்று பட்டியல்கள் நிதியமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று அறிய முடிகின்றது. அந்தப் பட்டியல்களில் 2 ஆயிரத்து 500 பொருள்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## யாழில் தொடர்...

மானிப்பாய் நகரப் பகுதி மற்றும் மாகியப்பிட்டியில் நடந்துள்ளன. மோட்டார் சைக்கிள்களில் வந்த குழுக்களே வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளன.

**மானிப்பாய்**

மானிப்பாயில் நேற்று மாலை நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். மானிப்பாய் நகரப் பகுதியில் உள்ள வணிக நிலையத்தில் பணிபுரியும் தெல்லிப்பழையைச் சேர்ந்த 21 வயது இளைஞரே கையில் வெட்டுக்காயத்துக்கு உள்ளாகியுள்ளார்.

மாலை 6.10 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் வாள்வெட்டுத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

**மாகியப்பிட்டி**

மாகியப்பிட்டியில் நேற்று இரவு நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் சண்டிலிப்பாயைச் சேர்ந்த 27 வயது இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

சூரிய உதயம் சனசமூக நிலையம் அருகில் நின்றிருந்த இளைஞன் மீது 4 மோட்டார்சைக்கிள்களில் வந்த 8 பேர் வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில் இளைஞர் படுகாயமடைந்ததுடன், அவரது விரல் துண்டாக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-125)

## மடு...

லட்சம் பக்தர்கள் அங்கு முகாமிட்டுள்ளனர். நேற்றும் பெருந்திரளான பக்தர்கள் மடுத்திருத்தலத்தை நோக்கி வந்த வண்ணமிருந்தனர். திருவிழாவை முன்னிட்டுப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (அ-ம)

## இருநாள்கள்...

முதல் இரவு 9 மணி வரையான காலப் பகுதியில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடையை நீக்கக் காரணம் என்ன?

## விமல் வீரவன்ஸ கேள்வி

கொழும்பு, ஓக.15
புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை எதற்காக நீக்கப்பட்டது?. தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று கூறியே இந்த அமைப்புக்கள் மீது தடை விதிக்கப்பட்டது. அதனால் தடை நீக்கப்பட்டமைக்கான தெளிவான விளக்கத்தைப் பாதுகாப்பு அமைச்சுக் கூற வேண்டும்.
இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச வலியுறுத்தியுள்ளார்.
6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதும், தனிநபர்கள் சிலர் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடை அரசாங்கத்தால் நீக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை எதற்காக நீக்கப்பட்டது? தடை விதிக்கப்பட்டமைக்குக் காரணங்கள் இருந்தன அல்லவா?. தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று கூறியே இந்த 6 அமைப்புக்களுக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. அதனால் தடை நீக்கப்பட்டமைக்கான தெளிவான விளக்கத்தைப் பாதுகாப்பு அமைச்சு கூற வேண்டும்.
இப்போது அந்தத் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் தணிந்துவிட்டதா? அப்படி இல்லாவிட்டால் தடை நீக்கப்பட்டமைக்கு உண்மையான காரணம் என்ன? அதை அறிந்துகொள்வதற்கான உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு.
என்ன காரணத்துக்காக 6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் முக்கிய தனிநபர்கள் மீதான தடை நீக்கப்பட்டது என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும். பாதுகாப்பு அமைச்சு தெளிவான அறிவிப்பை வெளியிட வேண்டும்.
தடை செய்யப்பட்டிருந்த அமைப்புக்கள் தங்களது நோக்கங்களைக் கைவிட்டிருக்க வேண்டும் அல்லது அந்த அமைப்புக்களால் தேசிய பாதுகாப்புக்கு ஏற்படும் பாதிப்பு இல்லாமல் போயிருக்க வேண்டும். இந்த இரண்டில் எது நடந்தது என்பதை அறியும் உரிமை மக்களுக்கு உள்ளது-என்றார். (எ-22)

**வீட்டுப் பணிப்பெண் தேவை**
யாழ்.கந்தர்மடப்பகுதியில் 2 பெண்கள் உள்ள சிறு குடும்பம் ஒன்றில்.தாயாரை (நோய்வாய்ப்பட்டவர்) பராமரிப்பதற்கும்.வீட்டு வேலைகள் செய்வதற்கும் பணிப்பெண் ஒருவர் தேவை.
(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)
077 518 2148, 077436 9277

**English Classes**
Gr. 1 to O/L
Grammar and Syllabus
வீடு வந்து கற்பிக்கப்படும்
T.P.: 077 331 4608

**மணமகள் தேவை**
1981ல் பிறந்த உடுவிலைச் சேர்ந்த சுய தொழில் (வெல்டிங்) புரியும் பூரம். 1ம் பாதம் 14. பாவக்கிரகத்தை உடைய அழகிய மணமகனுக்கு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அழகிய மணமகள் தேவை.
074 020 6165, 077 029 4176

**வேலைவாய்ப்பு**
யாழ்நகரத்தில் இயங்கும் பற்சிகிச்சை நிலையம் ஒன்றிற்கு (Dental Clinic) G.C.E L / O படித்த 3 Km தூரத்திற்குள் வசிக்கும் பெண் ஒருவர் Dental Assistant பதவிக்கு தேவை.
077 110 1045, 077 487 1028

# குரங்கு அம்மை நோய் பீதி; கொல்லப்படும் குரங்குகள்

## உலக சுகாதார அமைப்பு கவலை

பிரேஸில், ஓக. 15
குரங்கு அம்மை நோய் பீதி காரணமாகப் பிரேஸிலில் விஷம் வைத்து குரங்குகள் கொல்லப்படுகின்றன என உலக சுகாதார அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.
பிரேஸிலில் இதுவரை ஆயிரம் பேர் வரையில் குரங்கு அம்மை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
குரங்குகளிடம் இருந்து நோய் பரவுகிறது என்கிற தவறான எண்ணத்தில் பிரேசில் மக்கள் குரங்குகளை கொலை செய்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
பிரேஸிலின் மிகப்பெரிய நகரமான ரியோ டி ஜெனிரோவில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 10 குரங்குகள் விஷம் வைத்துக் கொல்லப்பட்டன என செய்தி வெளியாகியுள்ளது. இது கவலைக்குரியது. தற்போது குரங்கு அம்மை நோய் மனிதர்களில் இருந்து மனிதர்களுக்குப் பரவுகின்றது. மக்கள் விலங்குகளைத் தாக்கக்கூடாது என உலக சுகாதார அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## கூகுள் நிறுவனத்துக்கு 300 கோடி அபராதம்

வொஷிங்டன், ஓக. 15
கூகுள் நிறுவனத்துக்கு 300 கோடி ரூபா அபராதம் விதித்து அவுஸ்திரேலிய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
பயனர்களின் தனிப்பட்ட இருப்பிடத் தரவுகளை நேரடியாகவோ அல்லது மறைமுகவோ சேகரித்த குற்றச்சாட்டில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

**வீடு வாடகைக்கு உண்டு**
மீசாலை வடக்கு புத்தூர் சந்திக்கு (கமநல சேவைக்கு பின் பக்கமாக) புதிதாக நிர்மாணிக்கப்பட்ட
3 அறைகளைக் கொண்ட சகல வசதிகளையும் கொண்டவீடு வாடகைக்கு உண்டு. 074 058 1704

**துரித பொதிகள் சேவை**
சகல நாடுகளுக்குமான கடிதங்கள் 3-5 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும். (குறிப்பு :- பணியாளர்கள் தேவை)
திருமுருகன் கொம் நெற்
321,K.K.S. Road
Jaffna
077 755 4528

**Student Visa**
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
1. Skilled Migration - Canada, Australia
2. Student Visa - Canada, UK, Australia, France, Finland, Sweden, Romania and New Zealand
3. Work and Study program- Canada 4. Minor Education - 5-17 years (Canada)
5. Visitor / Tourist visa - All countries
Visa Consultant
No 134, Adiyapatham Road, Thirunelvely.
Consultation Free
Contact: 077 038 5584

**தவறவிடப்பட்டுள்ளது**
11.08.2022 வியாழக்கிழமையன்று சுதுமலை அம்மன் கோவில் குபேர மண்டபத்தில் இருந்து மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் வரைக்கும் பூப்புனித நீராட்டுவிழாவினரால் ஒழுங்கு செய்த பஸ்ஸில் வந்தபோது எனது தாலிக்கொடி தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் எனது தொலைபேசியில் தொடர்புகொண்டு தகவல் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். தங்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
கௌரியம்மா நாகநாதன்
076 391 6103
076 060 7707
விலாசம்
நமசிவாயம் நாகநாதன்
இலுப்பையடி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
cs.20309) (2.6)

# மரண அறிவித்தல்



## திருமதி பிரபாவதி கமலநாதன் (பிரபா)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபா என்று அன்பாக அழைக்கப்படும் கமலநாதன் பிரபாவதி 12.08.2022 வெள்ளிக்கிழமையன்று காலமாகிவிட்டார்
அன்னார் சுப்பிரமணியம் கமலநாதன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர் கட்டடங்கள் திணைக்களம் - மத்தி) இன் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகசபை சிவகுரு, சிவகுரு பரஞ்சோதி தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா சுப்பிரமணியம், சுப்பிரமணியம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற உமாகாந்தன் மற்றும் மாலதி, சிவகாந்தன் (UK), கிருஷ்ணகாந்தன் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரசாந்தன் (கனடா), பிரதீபன் (உதவி தொழிநுட்ப உத்தியோகத்தர் கட்டடங்கள் திணைக்களம் - யாழ்ப்பாணம் - மத்தி), கவிதா (ஆசிரியை - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), பிரகாஷன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மாலினி (கனடா), ஸிந்துளா (உதவி முகாமையாளர் - மக்கள் வங்கி சுன்னாகம்), சிவானந்தன் (பிரதிப் பொது முகாமையாளர் - ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் - வட மாகாணம்), ஜெயரூபா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், நவமணிதேவி, வாமசிவன், காலஞ்சென்ற விஜயலஷ்மி மற்றும் மாலினி (UK), சுகாந்தினி (UK) ஆகியோரின் மைத்துனியும், நவீன், பிரவீன், பிரனேஷ், சஞ்ஜனி, மதுவந்தி, அஞ்சனன், ஒலிவியா, அமெலியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2022) செவ்வாய்க்கிழமை இலக்கம் 40, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

40, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(cs. 20310) (2.6)
தகவல்:
குடும்பத்தினர்
021 222 6062


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.